University of Jaffna, Sri Lanka
Faculty of Management Studies and Commerce

# PROCEEDINGS

# 6th International Conference on Contemporary Management 2021

## Issues and Challenges of Sustainable Development: Fostering Resolutions towards Economic Resilience

29th - 30th April 2021

Academic Partner

emerald PUBLISHING

ISSN 2783-8773

# ICCM-2021

# PROCEEDINGS

# 6th International Conference on Contemporary Management

## "Issues and Challenges of Sustainable Development: Fostering Resolutions towards Economic Resilience"

29th & 30th April, 2021

Faculty of Management Studies and Commerce
University of Jaffna,
Sri Lanka

**6th International Conference on Contemporary Management (ICCM) - 2021**

©Copy Right : 2021 Faculty of Management Studies and Commerce,
University of Jaffna, Sri Lanka.

Published by : Faculty of Management Studies and Commerce,
University of Jaffna, Sri Lanka.

URL : https://iccm.maco.jfn.ac.lk

e-mail : iccm2021@maco.jfn.ac.lk

T.P : +94 (0)21 222 3610

Printers : Guru Printers, Thirunelvely, Jaffna, Sri Lanka.

ISSN : 2783-8773

**Disclaimer:**
The contents of the full papers included in the publication proceedings remain with respective authors.

# இலங்கையின் இனப்பிரச்சினையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்
## ஜெயலலிதா காலம்வரை

**அருந்தவராஜா, க**
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை*

தமிழகத்தின் அரசியலில் மாறி மாறி ஆட்சியில் அமர்ந்த இரு பெரும் அரசியல் கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகமும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் காலத்திற்குக் காலம் தத்தமது அரசியல் காய்நகர்த்தலுக்கான கருவிகளிலொன்றாக இலங்கையின் இனப்பிரச்சினை யினைக் கையிலெடுத்தன. குறித்த இவ்விரு கட்சிகளிலொன்றான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினது பொதுச் செயலாளரான ஜெயலலிதாவும் அவரது கட்சியும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு பொறுத்தும் இலங்கைத் தமிழர் மீதான அனுதாபம் பொறுத்தும் அக்கறை கொண்டவர்களாகவே இருந்துவந்துள்ளனர். ஜெயலலிதாவினைப் பொறுத்தவரை அவர் இலங்கையின் இனப்பிரச்சினை பொறுத்து 2009 இற்கு முன்னரான காலப்பகுதியில் இலங்கைத் தமிழருக்கு ஆதரவான கொள்கையினைப் பின்பற்றாத ஒருவராகவும் 2009இற்குப் பின்னர் இலங்கைத் தமிழருக்கு ஆதரவான கொள்கையினையும் பின்பற்றிய ஒருவராகவும் காணப்பட்டவர். அதேநேரத்தில் இக்கட்சியினை நிறுவிய முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் உயிருடன் இருந்த காலம்வரை மேற்குறித்த விடயமாக நிலையான கொள்கையினையே இறுதிவரை அதாவது இலங்கைத் தமிழர் சார்பான கொள்கையினையே பின்பற்றியிருந்தார். வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் அமைந்த விமர்சன மற்றும் ஒப்பீட்டு ஆய்வாக காணப்படுகின்ற குறித்த ஆய்விற்குத் தேவையான தரவுகள் சமகாலத்தில் வெளிவந்த பத்திரிகைகள் மட்டுன்றி நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் நேர்காணல்கள், அவதானிப்புக்கள் உள்ளிட்ட வகையில் முதற்தர மற்றும் இரண்டாந்தரச் சான்றுகளாகப் பெறப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் குறித்த கட்சி மேற்கொண்ட அணுகுமுறைகள், பங்களிப்புக்கள், ஆட்சியில் அமர்ந்த அதிமுக மற்றும் திமுக ஆகிய இரு கட்சிகளையும் சார்ந்த முதலமைச்சர்களது இனப்பிரச்சினையின் தீர்விற்கான அணுகுமுறைகளுக்கு இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை அடையாளப் படுத்துவதென்பது ஆய்வினது பிரதான நோக்கங்களாகக் காணப்படுகின்றன. இதய சுத்தியுடன் இந்திய அரசும் தமிழக அரசும் இலங்கையின் இனப்பிரச்சினையினைத் தீர்ப்பதற்கான முயற்சியில் இறங்கியிருந்தால் தற்போதுவரை தீர்க்கப்படாத பிரச்சினையாக இலங்கையின் இனப்பிரச்சினை இன்றுவரை தொடர்ந்திருக்காதென்பதே நிஜம்.

**திறவுச்சொற்கள்**: *இனப்பிரச்சினை; திமுக; அதிமுக; தமிழ்க் குழுக்கள்; அகதிகள்*